தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2025

## 13 வயதுப்பிரிவு

(01.01.2012 – 31.12.2013 வரையில் பிறந்தோர்)

### மண்ணின் மகுடம் எங்கள் மாவீரர்கள்

அறத்தின் வழி நின்று தமிழினத்தின் துயர் துடைக்கத் துணிந்தவர்கள். தமிழீழ மண் மீட்கத் தலைவனுக்குத் தோள்கொடுத்து விடுதலைப் புலியாய் நிமிர்ந்தவர்கள். வரியுடை தரித்து வெஞ்சமராடிய எங்கள் சந்தன மேனியர். அன்பும் பண்பும் அவர்களின் அடையாளங்கள். வீரமும் வேகமும் அவர்களின் வெளிப்பாடுகள். தலைவர் மாமாவின் விழியசைவின் வினையறிந்த வித்தகர்கள். தரைப்புலியாய், கடற்புலியாய், கரும்புலியாய், வான்புலியாய், வேவுப்புலியாய் வலம் வந்த வல்லமைகள்.

சின்னச் சிரிப்போடு வண்ணக் கதைகள் பேசி வரலாற்றை அளந்தவரே! வாழுங்காலத்தை எமக்காக உவந்தளித்த உன்னதங்களே! பெற்றவரை, உடன்பிறந்தவரை, தோழர்களை, வாழ்க்கைத் துணையை, பிள்ளைகளைத் துச்சமெனத் துறந்தீரே! பட்டங்களும் பதவிகளும் பெரிதல்ல; மண்விடுதலை ஒன்றே உயர்வெனச் செயலில் காட்டிய வீரர்களே!

தமிழினத்தின் இருப்பிற்காக நெருப்பாகிச் சென்றவரே! கந்தகம் சுமந்து மண்ணிலும் விண்ணிலும் கடலிலும் வீரத்தின் தீரங்களாய் ஈகத்தின் உச்சங்களாய் வெடித்துச் சிதறியவர்களே! பசித்தீ வளர்த்து உயிரை உருக்கியவரே! தமிழீழ மண்மீட்புப் போரிலே இன்னுயிரை ஈந்தவரே! உம்மை எம் நெஞ்சங்களில் சுமக்கின்றோம். கல்லறை மேனியராய் காந்தள் மலர்தூவி வணங்குகின்றோம். நீங்கள் தமிழீழ மண்ணின் மகுடமான மாவீரர்கள். உங்கள் கனவுகளை எமதாக்கி, எம்பணி தொடர்கின்றோம்.

உலகம் வியக்கும் வெற்றிகளை எமக்கு ஈட்டித் தந்தவர்கள் நீங்கள். ஈழத்தின் ஆதிக்குடிகளான எம்மை, அழித்துவிடலாம் எனக் கருதியவர்களுக்கு உங்கள் உயிர்க்கொடையால் பதிலிறுத்தவர்கள் நீங்கள். பெண், ஆண் என்கின்ற வேறுபாடு களைந்து, அனைவரும் ஒன்றாக நின்று, எரிமலையாகிப் பகை எரித்தவர்கள்.

மாவீரர்களே! கல்லறைக்குள் வாழ்வதாய் எண்ணி உங்களை விதைத்த இடங்களையெல்லாம் பகைவர் சிதைத்து மகிழ்கிறார். நீங்கள் வாழ்வது எம் நெஞ்சறைக்குள் அல்லவா! விடுதலைவேண்டி விழிமூடிய உங்களின் கனவுகளே எம்மைப் புடம்போடுகின்றன. தடம் மாறாமல் திடங்கொள்ள வைக்கின்றன.

விடுதலை நோக்கிய எமக்கான பணிகள் நிறைந்து கிடக்கின்றன. ஆதலால், ஒன்றுபட்டு நிற்போம். அவ்வப்போது உருவாகின்ற இடையூறுகளையும் திட்டமிட்ட சதிகளையும் கொள்கை உறுதியால் வென்று பயணிப்போம். வலியோடும் வடுவோடும் வாழ்கின்ற எங்கள் உறவுகளைக் கைகொடுத்து உயர்த்துவோம்.

மாவீரர் நாளென்பது நினைவுகளை மீட்கும் நாள் மட்டுமல்ல, வீரம் படைத்த மாவீரர்களின் இலட்சியக் கனவுகள் மீது உறுதி எடுக்கும் நாள். மாவீரரே! வையகம் உள்ளவரை வானுயர்ந்து நிற்கும் உங்கள் மாவீரம்! எமது உறுதியும் எழுச்சியுமே எமக்கான ஆயுதங்கள்! மாவீரர்கள் எமக்கு வல்லமை தந்து நிற்கிறார்கள். எமதாகும் தமிழீழம்.